**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2022ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ஆம் நாள் திங்கட்கிழமை

**இ.ம.எண்.02/2022 இன் அ.வ.எண்.52/2022**

கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, புரவிபாளையம் அஞ்சல், கோவிந்தனூர், எண்.6/70–ல் வசிக்கும் சுமார் 43 வயதுடைய திரு.M.மயில்சாமி கவுண்டர் மகன் திரு.M.ரங்கராஜ் ... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, புரவிபாளையம் அஞ்சல், கோவிந்தனூர், தோட்டத்துச்சாலை, எண்.1/4–ல் வசிக்கும் சுமார் 35 வயதுடைய திரு.தங்கவேல் மகன் திரு.T.முத்துராஜ்.

2) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, புரவிபாளையம் கிராமம், கோவிந்தனூர், எண்.54–ல் வசிக்கும் சுமார் 58 வயதுடைய திரு.லேட்.கந்தசாமி கவுண்டர் மகன் திரு.K.செல்வ ராமசாமி.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

எதிர்மனுதாரர்களோ, அவர்களது உறவினர்கள், முகவர்களோ அல்லது ஆட்கள் வகையறாக்களோ மனு 2வது அயிட்ட சொத்தில் மனுதாரர் கொண்டுள்ள சுவாதீனத்தில் இடையூறு செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 09.02.2022

இம்மனுவானது கடந்த 16.11.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ரமேஷ்

குமார் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## <u>இறுதி உத்தரவு</u>

1. முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்கள் வகையறாக்களோ மனு 2வது அயிட்டச்சொத்தில் மனுதாரர் கொண்டுள்ள சுவாதீனத்தில் இடையூறு செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

## <u>செலவுத்தொகை பட்டியல்</u>

<u>மனுதாரர் தரப்பில்</u> <u>எதிர்மனுதாரர் தரப்பில்</u>

(இரு தரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

## <u>சொத்துவிபரம்</u>

**<u>Item No.1:</u> (Plaintiff's Property)**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், புரவிபாளையம் கிராமம் புலத்தில் பட்டா எண்.1469க்கு கட்டுப்பட்ட க.ச.643 நெ.காலை பு.ஹெக். 6.81.0 ஏர்ஸ்க்கு பு.ஏ.16.82 செ.க்கு தீர்வை ரூ.23.06 பை. ஷை பூமியும், இதிலுள்ள தென்னை மரங்களும், ஷை பூமியில் வடக்கு பார்த்துள்ள விவசாய உபயோகத்திற்கான வில்லை வீடும், ஷை பூமியிலுள்ள துரஸ்து கிணறுகள் 2ம் ஷை கிணறுகள் முறையே எஸ்.சி.எண்.4ல் இணைக்கப்பட்டுள்ள 7.5 எச்.பி. இ.எம்.பி. செட்டு 1ம்

**எஸ்.சி.நெ.135 ல் இணைக்கப்பட்டுள்ள 7.5 எச்.பி. இ.எம்.பி. செட்டு 1 ம், ஷை பூமிக்குண்டான ஆள் அம்பு, கால்நடைகள், கனரக வண்டி வாகனாதிகள் போகவர உள்ள மாமூல் வழி, தடம் நடை பாத்தியங்கள் சகிதம்.**

**<u>Item No.2:</u> (Common Passage)**

The passage leads from S.F.No.645/2 to the S.F.No.643 (Plaintiff's property) through the S.F.No.642 on its eastern side with the breadth of 17 feet and to the length of 275 feet mud road passage in Puravipalayam village, Pollachi Taluk.

**இவ்வுத்தரவு 2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.**

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பொள்ளாச்சி.**

---

**<u>இறுதி உத்தரவு</u>**

ஐ.ஏ.02/2022 இன் ஓ.எஸ்.52/2022

நாள்: 28.11.2022

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---